# உலக டுஷீன் தசை சிதைவு நோய் விழிப்புணர்வு விழா

கோவை, செப். 11

உலக டு ஷீன் தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தினம் செப்டம்பர் 7 அன்று அனுசரிக்கப்படுகிறது.

இதை முன்னிட்டு, மரபணு பரிசோதனை, கலந்தாய்வு பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் 100க்கும் மேற்பட்ட பின் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு நிகழ்ச்சி கோவை ஜென்னீஸ் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழாவிற்கு ஓ.ஆர்.டி.ஐ நிறுவனர் பிரசன்னகுமார் தலைமை தாங்கினார். இயற்கை சிகிச்சை நிபுணர் சுப்பிரமணியம் கவுரவ விருந்தினராக கலந்து கொண்டார். டுகேதேர் அனிமேஷன் நிறுவனர் டெஸ்மாண்ட் இமானுவேல் எபினெஸிர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். எம்.டி.சி ஆர்.சி தன்னார்வ நிறுவனர் லக்ஷ்மி வரவேற்புரை வழங்கினார்.




பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில், உலகம் முழுவதும் 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட ஆண் குழந்தைகளுக்கு தசை சிதைவு நோய் ஏற்படுவதாக கூறப்படுகிறது. இது அரிய நோயாக கருதப்பட்டாலும், தமிழ்நாட்டில் மட்டும் அதிகளவில் இந்நோய் பாதித்த குழந்தைகள் உள்ளனர். இந்நோய் மரபுவழி வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஆண் குழந்தைகளை மட்டும் தாக்கும் மருந்து இன்றளவிலும் கண்டறியப்படவில்லை. தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பத்திற்காக 13 ஆண்டுகளாக எம்.டி.சி ஆர்.சி சேவையாற்றி வருகிறது என்றார்.

MAKKAL MUGAM (11-09-2019)